**தேதி:- 11.02.2020 அசல் வழக்கு எண்.148/2010 வா.சா.2 (சந்திரன்)**

**குறுக்கு விசாரணை:- (7, 13, 14, 15 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் நீதித்துறையில் முதுநிலை கட்டளைப்பணியாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். வா.சா.1 சாட்சியம் அளிக்கும் போது ஒவ்வொரு வாய்தாவிற்கும் நான் அவருடன் வந்தேன் என்றால் சரிதான். ஏழு சொத்துக்கள் குறித்து தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கை தாக்கல் செய்தவற்கு வாதியுடன் நான் சென்று வழக்கறிஞருக்கு நான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். என் திருமணம் 1983 ல் நடந்தது. 1983 க்கு முன்பாக வாதி குடும்பத்தில் என்னென்ன நடந்தது என்று தெரியாது. திருமணமான பிறகு ஒரு வருடம் அனுப்பானடியில் குடியிருந்தோம் பிறகு விராட்டிபத்து கிராமத்தில் குடியிருந்து வருகிறோம். 1, 2 வாதிகளுக்கும், அவர்களது தகப்பனாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குரையை படித்துப் பார்த்துதான் நாங்கள் வழக்கை நடத்துகிறோம். நாகசோணைமுத்துப்பிள்ளை அவர்கள் பலசொத்துக்களை குடும்ப டிரஸ்ட் சொத்துக்களாக பாகம் பெற்றுக் கொண்டார் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எந்தெந்த சொத்துக்களை குடும்ப டிரஸ்ட்டுக்காக பாகமாக வாங்கினார் என்றால் எனக்குத் தெரியாது. 1933 ல் அவ்வாறு பாகமானது. பாகப்பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. பாகப்பிரிவினை பத்திரத்தை படித்துப் பார்க்காமால்தான் வழக்கை நடத்துகிறோம் என்றால் பத்திரத்தை படித்துப் பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தை படித்துப் பார்த்தேன். அதில் நான்கு அட்டவணைகளாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளது. 7 ஆம் பிரதிவாதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எழுத்தராக பணியில் இருந்து வருகிறார். 7 ஆம் பிரதிவாதிக்கு நான் வேலை வாங்கிக் கொடுக்கவில்லை. 7 ஆம் பிரதிவாதியின் கணவரான 1 ஆம் பிரதிவாதி இறந்ததால் கருணை அடிப்படையில் 7 ஆம் பிரதிவாதிக்கு வேலை கிடைத்தது. 1 ஆம் பிரதிவாதி எந்த ஆண்டு என்ன தேர்வு எழுதி வேலைக்கு சேர்ந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் ஏ அட்டவணைச் சொத்து ராமலிங்கம்பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது. பி அட்டவணைச் சொத்து என் மாமனார் ஆறுமுகம்பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது. சி அட்டவணைச் சொத்து நல்லம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது. சி அட்டவைணச் சொத்து

நல்லம்மாளுக்கு ஒதுக்கப்பட்டதாக வழக்குரையில் சொல்லவில்லைஎன்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எனக்கு ஞாபகமறதி அதிகமா என்றால் அவ்வப்போது ஞாபகமறதி வரும். டி அட்டவணைச் சொத்து பொதுவாக வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சி அட்டவணைச் சொத்து மேற்படி நல்லம்மாளுக்கு ஆயுட்பரியந்தமாக கொடுக்கப்பட்டு அவர் இறந்த பிறகு அவரது மகன்களுக்கு போக வேண்டுமென்று பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நல்லம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் புலஎண்கள் தெரியாது. சி அட்டவணையில் ஒரு கூரைவீடு, ஒரு இடம் ஆகியவை கண்டுள்ளன. வீடு விராட்டிபத்திலும், இடம் கொக்குளப்பி கிராமத்திலும் உள்ளது. மேற்படி சி அட்டவணைச் சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்படவில்லை. சாட்சி தானாக முன்வந்து சி அட்டவணையில் கண்டுள்ள வீட்டை ராமலிங்கம்பிள்ளை எடுத்துக் கொண்டதாகவும், இடத்தை இருவரும் சேர்ந்து விற்று பணத்தைப் பகிர்ந்து கொண்டதாகவும் கூறுகிறார். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அந்த விபரத்தை வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் எனக்குத் தெரியாது. இருவரும் சேர்ந்து கொக்குளப்பியில் இருந்த இடத்தை விற்றதாக காட்ட ஆவணம் இல்லை. எப்படி, எப்போது யாருக்கு விற்றார்கள் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. சொத்து விற்கப்படவில்லை என்றும், சி அட்டவணைச் சொத்துக்கள் தற்போதும் உள்ள என்றும் அவற்றை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் டி அட்டவணையில் மூன்று சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன. மூன்று சொத்துக்களின் விஸ்தீரணம், புலஎண் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. டி அட்டவணையில் மூன்று சொத்துக்கள் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் டி அட்டவணையில் முதல் லக்கச் சொத்தை இந்த வழக்கில் 5 ஆம்லக்கச் சொத்தாக காட்டியுள்ளேன். டி அட்டவணையில் 2,3 லக்கச் சொத்துக்கள் ஒருபுளியமரம் மற்றும் மாமரம் அவற்றை விற்றுவிட்டார்கள். டி அட்டவணையில் 1 ஆம்லக்கச் சொத்தை தாவாச் சொத்துவிபரத்தில் 5 ஆம்லக்கச் சொத்தாக காட்டியிருப்பதாக வழககுரையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. அதன் புலஎண்.129/1 ஏ. நான் தவறாக சொல்கிறேன் என்றும் தாவா 5 ஆம்லக்கச் சொத்தின் புலஎண்ணே தெரியாமல் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ல் டி அட்டவணையில் 2 ஆம்லக்கத்தில் ஒரு புளியமரமும், மூன்றரை செண்ட் இடமும் காட்டப்பட்டுள்ளது. டி அட்டவணையில் 3 வது லக்கச் சொத்து காட்டப்பட்டுள்ளது. மேற்படி 2,3 லக்கச் சொத்துக்கள் தற்போதும் உள்ளதா அல்லது விற்றுவிட்டார்களா என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மேற்படி டி அட்டவணைச் சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. டி அட்டவணைச் சொத்துக்களை என் மாமனாரும், இராமலிங்கம்பிள்ளையும் பிரித்துக் கொண்டார்களா என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1 ஆம் வாதி தன் விசாரணையில் விட்டுள்ள விபரங்களை என் நிரூபணவாக்குமூலத்தில் பூர்த்தி செய்துள்ளேன் என்றால் தவறு. வழக்குரையில் சொல்லாத விபரங்களையும் நிரூபணவாக்குமூலத்தில் புதிதாக சொல்லியுள்ளேன் என்றால் தவறு.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.